# 1857 - தேசிய சுதந்திரப் போராட்டமே!

ஏராளமான புத்தகங்கள் 1857-ம் வருட நிகழ்வு குறித்து வந்துள்ளன; வந்து கொண்டிருக்கின்றன. வில்லியம் டால் ரிம்பள் எழுதிய ‘த லாஸ்ட் மொகல்’ என்ற புத்தகம், இதை ‘மக்கள் யுத்தம்’ என்றே குறிப்பிடுகின்றது. இந்த நிகழ்வின் சுருக்கம்...

1857-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதி அன்று இந்து சிப்பாய்களும் முஸ்லிம் சிப்பாய்களும் டெல்லியை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். 11-ம் தேதி அன்று டெல்லியைக் கைப்பற்றினர். பகதூர்ஷாதான் மன்னர் என்று பிரகடனப் படுத்தப்பட்டது.

கான்பூரில் 1857 ஜூன் 4-ல் கிளர்ச்சி வெடித்தது. கருவூலத்தைச் சூறையாடினார்கள். நானாசாகேப் பேஷ்வாவை தலைவராகப் பிரகடனப்படுத்தினார்கள். அவரது தலைமையில் டெல்லியை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர். கல்யாண்பூர் என்ற இடத்தை அடைந்தபோது நானாசாகேபின் உதவியாளரான அசிமுல்லாகானும் மற்றவர்களும் டெல்லிக்குச் செல்வது வீண்வேலை என்று எடுத்துக் கூறினார்கள். அதை நானாவும் ஏற்றுக் கொண்டார்.

10



ஜூன் 5-ம் தேதி அன்று அவர்கள் கல்யாண்பூரில் இருந்து கான்பூருக்குப் புறப்பட்டனர்.

ஜான்சி ராணி 1857-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் தேதி சுதந்திரப் பிரகடனத்தை அறிவித்தார். இதற்கு முன்பாகவும் அவர் பலமுறை பிரிட்டிஷ் அரசுடன் மோதி வந்துள்ளார். ஆனால் இந்த நிகழ்வுதான் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த இடத்தில் ஒரு நிகழ்வினை அலசிப்பார்க்க வேண்டியது முக்கியம் என்று படுகிறது. ஜான்சி ராணியும் நானாசாகேபும் ஏன் கைகோத்து செயல்படவேண்டும். வரலாற்றின் பக்கங்களில் என்ன பதியப்பட்டுள்ளது பார்ப்போம்...

மகாராஷ்டிரத் தலைவர்களில் நானாசாகேப் பேஷ்வா, ஜான்சிராணி லட்சுமிபாய், தாந்தியா தோபே ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களில் நானாசாகேப்பும் ராணி லட்சுமிபாயும் மிக முக்கியமானவர்கள். நானாசாகேப், மகாராஷ்டிர அரசின் கடைசி பேஷ்வா பாஜிராவின் தத்துப்பிள்ளை. ராணி லட்சுமிபாய் ஜான்சியில் அரசாட்சி செய்த ராஜா கங்காதர ராவின் மனைவி.

மகாராஷ்டிராவின் கடைசி பேஷ்வா பாஜிராவ், ஆங்கிலேயர்களின் சூழ்ச்சிக்கு அடிபணிந்து தன் அரசை அவர்களிடம் விட்டுவிட்டு, தனக்குக் கிடைத்த மிகக் குறைந்த உபகாரச் சம்பளத்தைக் கொண்டு கங்கைக் கரையில் ஒரு கிராமத்தில் ‘சிவனே...’ என்று வாழ்க்கை நடத்தி வந்தார்.

அங்கேதான் 1827–ல் இரண்டு வயது கடந்த நானா சாகேப்பை தத்தெடுத்துக் கொண்டார். இது நடந்து பன்னிரண்டு ஆண்டுகளில், பாஜிராவ் வசித்துவந்த கிராமத்துக்கு தம் நான்கு வயதுப் பெண் மனுபாயுடன் வந்தார்கள் அவள் பெற்றோர். இந்தப் பெண்குழந்தைதான் பிற்காலத்தில் ஜான்சி ராணி லட்சுமிபாயாகத் திகழ்ந்தாள்.

இங்கேதான் நானாசாகேபும் மனுபாயும் ஒன்றாக விளையாடினார்கள். ஒன்றாக ராமாயண மகாபாரதக் கதைகளைக் கேட்டு வளர்ந்தார்கள். ஒரே இடத்தில் ஆயுதப் போர்ப் பயிற்சியைப் பெற்றார்கள். நானாசாகேப் பாடம் கற்றபோது மனுபாயும் அவற்றைக் கற்றுக் கொண்டாள். யானையேற்றம், குதிரையேற்றம் போன்ற போர்ப்பயிற்சிகளையும் பெற்றாள். இப்படி ஒன்றாக சகோதரனும் சகோதரியுமாகப் பழகிய இருவரும்தான் 1857 போரின்போதும் ஒன்றாக இருந்து ஆங்கிலேயரைக் கதிகலங்க வைத்தார்கள்.

1842–ல் மனுபாய், ஜான்சி மகாராஜா கங்காதரராவை மணந்துகொண்டு ஜான்சி ராணியானாள். இது நிகழ்ந்த பத்து ஆண்டுகளுக்குள், மகாராஷ்டிராவின் கடைசி பேஷ்வா பாஜிராவ்



தம்முடைய அதிகாரங்களை தன் தத்துப்பிள்ளையான நானாசாகேப்புக்குக் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டார். ஆனால் கம்பெனியார் கடைசி பேஷ்வா பாஜிராவுக்குக் கொடுத்து வந்த சொற்ப உதவித்தொகையைக்கூட நானாசாகேபுக்குக் கொடுக்க மறுத்துவிட்டனர். அவரை பேஷ்வாவாக அங்கீகரிக்கவும் இல்லை. அதேபோல், 1853–ல் ஜான்சி லட்சுமிபாயின் கணவர் இறந்ததும், ராணி ஒரு குழந்தையை தத்து எடுத்துக் கொண்டாள். ஆனால் அதையும் கம்பெனியார் ஒப்புக்கொள்ளவில்லை. ஜான்சியை தங்கள் ராஜ்ஜியத்துடன் இணைத்துக்கொள்ளப் போவதாக அறிவித்தனர். நானாசாகேப்பின் வீர சகோதரியாகத் திகழ்ந்த லட்சுமிபாயோ, என் ஜான்சியைக் கொடுக்கமாட்டேன். போர் முனையில் சந்திப்போம்... என்று தீர்மானித்துவிட்டாள்.

இப்படி இருக்கும்போது, அயோத்தி நவாப் வீழ்ந்தவுடன், முஸ்லிம்களுக்கும் மராட்டியர்களுக்கும் இடையே இருந்த பகை மறைந்தது. அவர்கள் இருவரும் கைகோர்த்தனர். இந்தப் பின்னணியில்தான் 1857 சுதந்திர யுத்தம் நடந்தது.

லக்னோவில் மே மாதம் 3-ம் தேதி கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் பிரிட்டிஷார் இதை ஒடுக்கிவிட்டனர். பின்னர் மே 30/31-ல் கிளர்ச்சி பெருமளவில் வெடித்தது. இதை பேகம் ஹஸரத்மஹால் தலைமை தாங்கி நடத்தினார். ஏனெனில் அயோத்தி நவாப் கொல்கத்தாவில் கைதியாக அடைத்து வைக்கப்பட்டிருந்தார். பீகாரில் அர்ரா பக்கத்தில் உள்ள ஜகதீஷ்பூரில் ராஜபுதனத் தலைவர் கன்வர்சிங் தலைமையில் கிளர்ச்சி வெடித்தது. தானாபூர் சிப்பாய்கள் அர்ரா நோக்கி ஜூலை 25-ம் தேதி அணிவகுத்துச் சென்றனர். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடிய வீரம்மிக்க தலைவர்களில் கன்வர்சிங்கும் ஒருவர்.

1857-ல் மீரட், டெல்லி, கான்பூர், லக்னோ, ஜான்சி, ரூஹல்கண்ட், ஜகதீஷ்பூர் ஆகிய இடங்களில் எல்லாம் முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன. கிழக்கிந்திய கம்பெனியின் வங்காள ராணுவப் பிரிவுதான் கிளர்ச்சியில் முதல் இடத்தில் இருந்தது. வங்காள ராணுவப்பிரிவு என்று பெயர் இருந்தபோதிலும், இதில் வங்காளிகள் மட்டுமே இடம்பெறவில்லை. வங்காளிகளுடன் உத்திரப்பிரதேசத்தினர் மற்றும் பீகாரிகளும் இடம் பெற்றிருந்தனர். இதில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் அங்கம் வகித்தனர்.

1857-ம் வருட சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்ததற்கு பல காரணங்கள் உள்ளன. அதில், ஆங்கிலேயர் எழுதி வைத்த குறிப்பு: மக்களிடையே எழுச்சி இருந்த அளவுக்கு, தெளிவான இலக்கு இல்லை. ஒருங்கிணைந்த தலைமையும் இல்லை. குழப்பமான நிலை மேலோங்கி இருந்தது. இஸ்லாமியர்களின் ஆட்சியை மீண்டும் கொண்டு வர முஸ்லிம்கள் துடித்தார்கள். ஆனால் இந்துக்கள் இதை விரும்பவில்லை. இத்தகைய வேறுபாடுகளால்தான் 1857-ல் நடைபெற்ற சுதந்திரப் போர் தோல்வியைத் தழுவியது.

- ஆனால் இந்தக் காரணம் உண்மையாக இருக்க முடியாது என்பதைத்தான் பகதூர்ஷா மற்றும் நானாசாகேபின் நட்புறவில் விளைந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

**திருத்த வேண்டிய தவறு!**

வியாபாரம் செய்வதற்காக இந்தியா வந்த ஆங்கிலேயர்கள், இங்கு வியாபாரம் செய்வதை விட்டுவிட்டு, இங்கு நிலவி வந்த ஒற்றுமையின்மை, அறியாமை, வெள்ளைத் தோலைக் கண்டு நடுங்கும் இந்தியர்களின் தாழ்வு மனப்பான்மை இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு சாமர்த்தியமாக நாடு பிடிக்கத் தொடங்கினார்கள்.

வங்காளத்தில் 1740-ல் நவாப்பாக இருந்த அலிவர்த்திகான், ஆங்கிலேயர்களையும் பிரெஞ்சுக்காரர்களையும், டச்சுக்காரர்களையும் தங்கள் ராஜ்ஜியத்தில் எந்தவொரு சச்சரவுக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று கட்டளையிட்டிருந்தான். அந்த நவாப் 1756, ஏப்ரல் 21-அன்று இறந்துபோனான்.

அவனுக்குப்பின் அவனது இளைய மகள் வயிற்றுப் பேரன் சிராஜ் உத்தௌலா நவாப் ஆனான். அவனுக்கு குடும்பத்திலேயே எதிரிகள் இருந்தார்கள். அவர்களை சிராஜ் உத்தௌலா சிறையிலிட்டான். நவாப்பினுடைய தளபதியாக இருந்த மிர் ஜாஃபர் பதவி நீக்கம் செய்யப்பட்டான். நவாப்பினுடைய எதிரிகளுக்கு கம்பெனியார் ஆதரவு கொடுத்தனர். இன்னும் பல்வேறு விஷயங்களில் நவாப்புக்கும் ஆங்கிலக் கம்பெனியாருக்கும் விரோதம் வளர்ந்துகொண்டே வந்தது.

நவாப், கல்கத்தா காசிம்பஜார் என்னுமிடத்தில் இருந்த ஆங்கிலேயருடைய தொழிற்சாலையை வசப்படுத்திக் கொண்டார். ராபர்ட் கிளைவ் இங்கிலாந்திலிருந்து வந்து, இழந்த பிரதேசங்களை மீட்டதுடன் நவாப்புடன் 1757–ல் ஓர் ஒப்பந்தமும் செய்து கொண்டான். இருந்தபோதிலும் கிளைவ் சந்தர்ப்பம் பார்த்து நவாப்பால் பதவி நீக்கம் செய்யப்பட்ட மிர் ஜாஃபருடன் சேர்ந்து கொண்டு, பிளாசியில் ஒரு போரை நடத்தினான். அதில் சிராஜ்உத்தௌலா தோற்றார். மிர் ஜாஃபரை பொம்மை நவாப்பாக ஆக்கி, ஆங்கிலேயர் ஆட்சியை ராபர்ட் கிளைவ் ஸ்தாபித்துவிட்டான். இந்தப் பிளாசி யுத்தம்தான், நாட்டின் தேசியத்துக்குக் கிடைத்த முதல் அடி.

அதன்பிறகு கிழக்கிந்திய கம்பெனியார் சிறிது சிறிதாக நாடு பிடிக்கத் தொடங்கினார்கள். வாரிசு இல்லாமல் மன்னர்கள் இறந்துபோனால் ராஜ்ஜியத்தை ஆங்கிலேயர்களே பிடுங்கிக் கொண்டார்கள். சுவீகாரம் எடுத்துக் கொண்டதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படி பாதிக்கப்பட்டவர்களில் பேஷ்வா பாலாஜி பாஜி ராவ், ஜான்சி மன்னர், அயோத்தி சுல்தான் - இப்படி கணக்கற்றவர்களின் ராஜ்ஜியங்கள் பிரிட்டிஷார் வசம் போனது.

கிழக்கிந்திய கம்பெனியின் படை வளர்ந்துகொண்டே இருந்தது. அதில் பணிபுரிய இந்திய நாட்டுச் சிப்பாய்களும் பெருமளவில் சேர்க்கப்பட்டார்கள். ஆங்கில சிப்பாய்களின் உடைகளுக்கும் இந்திய சிப்பாய்களின் உடைகளுக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. அவர்கள் காலில் ஷூ அணிந்திருந்தார்கள்; ஆனால் இந்திய சிப்பாய்களோ வெற்றுக்கால் வீரர்களாக இருந்தார்கள். அந்தப் படைப்பிரிவுகளில் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய பலவும் இந்திய சிப்பாய்களை வெகுவாக பாதித்தது.

என்ஃபீல்டு துப்பாக்கி ரவைக்கு மாட்டுக் கொழுப்பு தடவப்படடது. இந்து வீரர்களின் மனதை அது புண்படுத்தியது. பன்றிக் கொழுப்பு பயன்படுத்தியமையால் இஸ்லாமிய வீரர்கள் வருத்தமடைந்தார்கள்.

ஏராளமான இதர காரணங்களால் ஆங்கிலப் படையில் பணிபுரிந்து வந்த பாரத நாட்டு சிப்பாய்கள் மத்தியில் அதிருப்தியும், எதிர்ப்பும், ஆத்திரமும் வளர்ந்துவரத் தொடங்கியது. இவையெல்லாம் 1857-ல் ஆங்கிலக் கம்பெனியில் சிப்பாய்களாகப் பணிபுரிந்த சிப்பாய்களை, அவர்களது எஜமானர்களுக்கு எதிராக ஒரு கலகம் செய்யத் தூண்டிவிட்டது.

“இது ஒரு வெகுஜனப் புரட்சியாக பொதுமக்கள் கலந்துகொண்ட போராட்டம் இல்லையாயினும், ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தங்களது உணர்வை பாரத சிப்பாய்கள் ஆட்சியாளர்களுக்கு

அறிவித்த தினம் என்று சொல்லி, இதனை ஆங்கில சரித்திர ஆசிரியர்கள் 'சிப்பாய்க் கலகம்' என்றே குறிப்பிட்டு எழுதி வந்தார்கள்.

ஆனால், வீர சாவர்க்கர் முதல் அசோக் மேத்தா, எஸ்.என்.சென். முதலான ஆசிரியர்கள் இதனை முதல் சுதந்திரப் போராகத்தான் வர்ணித்தார்களே தவிர, இதனை சிப்பாய்க் கலகம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை.

அதுபோல், இந்த முதல் சுதந்திரப் போரைப் பற்றி எழுதிய அத்தனை ஆங்கில வரலாற்றாளர்களும், வங்காளத்தில் பாரக்பூரில் பேரேடு நடக்கும்போது ஆங்கில அதிகாரியைச் சுட்டுக் கொன்றுவிட்டு, அதற்காக தானும் மரணத்தை ஏற்றுக் கொண்டு முதல் வேட்டுச் சத்தத்தைக் கிளப்பிய மங்கள் பாண்டேயைப் பற்றி குறிப்பிடுகையில், ஒரு 'பிராமண சிப்பாய்' என்றே குறிப்பிடுகிறார்கள். ஏன் இப்படிக் குறிப்பிட வேண்டும்? மங்கள் பாண்டே சாதாரண ஒரு சிப்பாய். ஆங்கிலேயரிடம் வேலை பார்த்தவன். அவனைக் குறிப்பிடும்போது அவன் ஜாதியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய தேவை என்ன? அதுபோலவே மற்ற எல்லா வீரர்களையும் குறிப்பிடுகையில் அவர்கள் ஜாதியைச் சொல்லியா குறிப்பிடுகிறார்கள்? மங்கள் பாண்டேக்கு மட்டும் ஏன் இந்த ஜாதியக் குறியீடு?

அதற்குக் காரணமும் இருக்கிறது. ஆங்கிலேயர்கள், 1857 எழுச்சியை ஒரு சுதந்திரப் போராட்டமாக வர்ணிப்பதையோ, பிரிட்டிஷாருக்கு எதிராக இந்தியர்கள் புரட்சி செய்தார்கள் என்பதையோ ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. '*இது இந்து மதவாதிகளும், அடிப்படைவாத இஸ்லாமியர்களும் இணைந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடத்திய கலகம், இந்தக் கலகத்தைத் தொடங்கி வைத்தவன் யார் தெரியுமா? ஒரு சனாதன மத பிராமணன். இந்து மத உணர்வுகளுக்கு எதிராக ஆங்கிலேயர்கள் நடக்கிறார்கள். மாட்டுக் கொழுப்பு தடவிய என்ஃபீல்டு துப்பாக்கியை வாயினால் கவ்வி இழுக்கும்படி செய்கிறார்கள். இந்துக்களுக்கு பசு புனிதமானது அல்லவா, இப்படிச் செய்யும் இழிச்செயலை எதிர்த்து அந்த சனாதன பிராமணன் ஆயுதம் ஏந்தி ஆங்கிலேய அதிகாரியைச் சுட்டுக் கொன்றுவிட்டான். ' அதுபோலவே இந்துக்களும் இஸ்லாமியர்களும் தங்கள் சிப்பாய்களைத் தூண்டிவிட்டு மீரட், டெல்லி, கான்பூர் ஆகிய இடங்களில் புரட்சி செய்தனர். கடைசி முகலாய மன்னரை இந்தியாவின் சக்கரவர்த்தியாக பிரகடனப்படுத்தினார்கள்*' என்று அவர்கள் உலகை நம்பச் செய்வதற்காக, மங்கள் பாண்டேயின் பெயரோடு பிராமண சிப்பாய் என்பதையும் மறக்காமல் குறிப்பிட்டு, '*இது ஒரு மதப்போர், அரசியல் விடுதலைப் போர் அல்ல*' என்பதை பிரகடனப்படுத்தினார்கள்.

உண்மையில் கொழுப்புத் தடவிய தோட்டா விவகாரம் ஒரு சிறு காரணமாக மட்டுமே இருந்தது. ஆனால், சிப்பாய்களின் மனத்தைப் பலவகையிலும் புண்படுத்தி, அவர்களின் கோபத்தை

பல்வேறு வகையிலும் ஏற்கெனவே ஆங்கிலேயர் தூண்டிவிட்டிருந்தனர். காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக, ஏதோ காரணத்துக்காக துப்பாக்கி எடுக்கப்போய், அது, கொழுப்பு தடவிய தோட்டா விவகாரத்தால் என்று ஆகிப்போனது...

இது உண்மையில் மத அடிப்படைவாதப் போராட்டமாக இருந்தால், பகதூர்ஷா மன்னராக ஏன் அறிவிக்கப்பட வேண்டும்? நானாசாகேபுக்கு ஏன் எல்லோரும் 'ஜே' போட வேண்டும்? எல்லோரும் ஓர் அணியில் ஏன் திரள வேண்டும். பொதுமக்களை சுதந்திர எண்ணத்தோடு ஒன்றிணைய ஏன் அறிக்கைகளை வெளியிட வேண்டும்? அதுவும், ஆங்கில ஆட்சிக்கு எதிராகத்தான் அறிக்கை விடுக்கப்பட்டதே ஒழிய, ஆங்கில மதவாதிகளுக்கு எதிராக அறிக்கை விடுக்கப்படவில்லை; மாறாக மதங்களின் பெயரால் சண்டையிட்ட நிலை மறந்து, ஒன்றிணைந்தார்கள்.

1857–ல் போராட்டம் தொடங்குவதற்கு முன் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை :

*'இந்துக்களே! முஸ்லிம்களே! எழுங்கள். சகோதரர்களே! எழுங்கள். கடவுள் அளித்திருக்கும் கொடைகளில் சிறந்தது சுயராஜ்ஜியம்தான். நம் தேசத்தை அடிமையாக்கி வரும் அவர்கள், இப்போது நம் மதத்தையும் நசுக்க முற்படுகிறார்கள். இனியும் நீங்கள் அலட்சியமாய் இருக்கப் போகிறீர்களா? அப்படி இருப்பது கடவுளுக்கே அடுக்காது. நாம் எல்லோரும் நமது குறிக்கோளை நிறைவேற்ற எவ்வித வேற்றுமையும் இன்றி ஒன்றுபடுவோமாக!'*

இந்தப் போராட்டம் நடைபெற்று வரும்போது தலைவர்கள் வெளியிட்ட வேறொரு அறிக்கை...

*'நிலம், பொருள், ஆற்றல் முதலான எல்லாவற்றையும் ஆண்டவன் அருளியது ஏன்? குறிப்பிட்ட சிலர் பிறரைச் சுரண்டி போகம் அனுபவிக்கவா? இல்லை, இல்லை. ஆண்டவன் கொடுத்த சுய ஆட்சியை மனிதன் பறிக்க விடுவது மகா பாதகம். பேடித்தனமும்கூட!'* – இப்படி இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சேர்த்து அறிவித்திருக்கிறது இந்த அறிக்கை. இத்தகைய குறிக்கோள்களுடன் கிளம்பியது எப்படி ஒரு கலகம் என்று சொல்லமுடியும்? இது போருக்கான பிரகடனம் இல்லையா?

பகதூர் ஷா டெல்லியில் செய்த பிரகடனத்தில், 'இந்து-முஸ்லிம் சகோதரர்களே' என்று நாட்டு மக்களை விளித்து சுதந்திரப்போருக்கு கச்சை கட்டுமாறு கேட்டுக்கொண்டார். டெல்லி முதலிய நகரங்களில் சுதந்திரக் கொடி தாங்கிக் கிளம்பியவர்கள், ''பகதூர்ஷாவுக்கு ஜே! நானாசாகேப்புக்கு ஜே!'' என்று கோஷமிட்டார்கள். போர் வீரர்களின் வீர கோஷங்களில் முஸ்லிம் கோஷங்களுடன் ஹரஹர மகாதேவா கோஷமும் இணைந்திருந்தது.

இந்து முஸ்லிம் மதங்களைச் சேர்ந்த பழைமைவாதிகள் பிரமித்தார்கள். ஆனால், மதவெறியால் அதுவரை பிரிந்திருந்த இதயங்கள், சுதந்திர வெறியால் இணைந்துவிட்டன.

டெல்லியில் எண்பத்திரண்டு வயதுக் கிழவரான பகதூர்ஷா முஸ்லிம் கொடியாகிய பச்சைப் பிறைக்கொடியைத் தூக்கியதும், இந்துக்களும் முஸ்லிம்களும் சிப்பாய்களும் ஒருங்கே ஆரவாரம் செய்தார்கள். பகதூர்ஷாவும் இந்து மதம் முஸ்லிம் மதம் இரண்டையும் ஒருங்கே ஆதரிப்பதாக திருக்குர்ஆன் மீதும் புனித கங்கை நீர் மீதும் ஆணையிட்டார். அந்தச் சுதந்திர வெறியில், பசுவதை செய்வதில்லை என முஸ்லிம்கள் குர்ஆன் மீது ஆணையிட்டுக் கூறினர். பசுமாமிசம் தின்பதில்லை என வாக்களித்தவர்களும் உண்டு. இந்த அம்சத்தை பகதூர்ஷா தம் பிரகடனத்தில் வற்புறுத்தினார்.

நானாசாகேப்பைப் போல் பகதூர்ஷாவும் சுதேச மன்னர்களுக்கு அறிக்கை விடுத்தார். சில சமஸ்தானங்களுக்கு கைப்பட கடிதம் எழுதினார். சுதந்திரப் போரில் இந்துக்கள், முஸ்லிம்கள் எல்லோரையும் ஈடுபடுத்தி ஒற்றுமை உண்டாக்க வேண்டும் என்பது பகதூர்ஷாவின் பொற்கனவுகளில் ஒன்று. ஆனால் இந்தப் பொற்கனவும் லட்சியங்களும் தென்னாட்டில் இருந்த ஐதரபாத் நிஜாம் முன் பலித்ததோ?! வெளிநாட்டு வரலாற்றாளர்கள் சொல்வதுபோல், முதலாவது சுதந்திரப் போர் ஒரு பேயாட்டம்தான். ஆனால் நினைவுடன் ஆடிய பேயாட்டம். சுதந்திர வெறியுடன் ஆடிய பேயாட்டம். அந்த வெறியில் மதவெறி மறைந்து போயிற்று. அதுபோல் டெல்லியிடம் இருந்த சுயநலமும் மறைந்துபோனது. ஆனால் அது அதன்பிறகு ஐதராபாத் நிஜாமிடம் வந்து அடைக்கலம் புகுந்தது. தமிழகத்தில் இதே ஐதராபாத் நிஜாமையும் ஆங்கிலேயரையும் ஒருசேர எதிர்கொள்ளும் துர்பாக்கியம் மக்களுக்குக் கிடைத்தது. புரட்சியாளர்களை ஆதரிப்பார் எவருமில்லை. சமஸ்தானங்களும் இல்லை; பாளையங்களும் தெம்போடு இல்லை. எனவே மக்கள் தாங்களாகவே போர் பரணி பாடினர். எந்தத் தென்னாட்டில் பாளையங்கள் புரட்சி செய்தனவோ அதே திருநெல்வேலி பகுதிதான் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வீரப்போரை முழங்கியது. 1947-ல் நாடு விடுதலை அடைய அதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

**உதவிய குறிப்புகள் :**


* TamilNadu Archives, Madras Govt. of Fort St.George / Madras.

* South India in 1857 by V.D.Divekar, compiled by K.M. Rao

* ராபர்ட் கிளைவ் முதல் ராஜாஜி வரை - பி.ஸ்ரீ

* விஜயபாரதம் 2007 தீபாவளிமலர்